சுருக்கம்

வேளாண்மைத் துறை – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்– புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை அரசு விதைப்பண்ணை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் அரசு விதைப் பண்ணையில் தலா ஒரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (பக) துறை

அரசு ஆணை (நிலை) எண்.39

நாள்:20.02.2015
திருவள்ளுவர் ஆண்டு 2044, மாசி 08
படிக்கப்பட்டவை:

1. பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களின் கடித எண் E1/New Colleges/VVR/2014 நாள் 22.08.2014.
2. வேளாண்மை இயக்குநர், கடித எண் விதைகள் 2/97201/2014, நாள் 09.09.2014.
3. அரசு ஆணை (நிலை) எண்.173, வேளாண்மைத் (பக) துறை நாள் 20.11.2014.

*****

**ஆணை:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழ் 07.08.2014 அன்று "வேளாண்மைக்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், அதிகரித்து வரும் வேளாண் கல்விக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மூன்று வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் ரூ.150.00 கோடி செலவில் அமைக்கப்படும்" என அறிவித்தார்கள்.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்ட மூன்று வேளாண்மைக் கல்லூரிகளை ரூ.150 கோடி செலவில் அமைப்பதற்கு பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

1) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான் மலை, புதுக்கோட்டை மாவட்டம்.
2) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
3) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர், திருவண்ணாமலை மாவட்டம்.

3. இந்நிலையில் மேலே இரண்டில் படிக்கப்பட்ட தனது கருத்துருவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு விதைப்பண்ணைகளில் தலா ஒரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு முன் நுழைவு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் என்றும், இது குறித்து வேளாண்மை இணை இயக்குநர் புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை அவர்களின் குறிப்புகள் பெறப்பட்டது என்றும் அதனடிப்படையில் பெருகிவரும் வேளாண் கல்விக்கான தேவை மற்றும் நீடித்த நிலையான வேளாண்மைக்கு ஆதாரமான வேளாண் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலை அரசு விதைப்பண்ணையில் 110 ஏக்கர் பரப்பு மற்றும்

திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் அரசு விதைப் பண்ணையில் 110 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்படி வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்க ஏதுவாக முன் நுழைவு அனுமதி வழங்கிடவும் பண்ணையிலுள்ள அறைகளை தற்காலிகமாக உபயோகித்துக் கொள்ள அனுமதி வழங்கிடவும் பரிந்துரை செய்து வேளாண்மை இயக்குநர் அவர்கள் அரசுக்கு பிரேரணை அனுப்பியுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கிறது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை அரசு விதைப்பண்ணையில், அதாவது குடுமியான்மலை கிராமப் புல எண்கள் 75,76,77,78,80 மற்றும் 81 (பகுதி) மற்றும் விசாலூர் கிராமப் புல எண்கள் 6,7,8, மற்றும் 9 ஆகியவற்றில் 110 ஏக்கர் பரப்பளவில் ஒரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கும், திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூர் அரசு விதைப்பண்ணையில் அதாவது வாழவச்சனூர் கிராம புல எண்கள் 1/2c, 2/5A2, 2/5B3, 3/3,4,5, 6/2, 7/2, 7/4, 8/1 , 9/1, 10/1, 11/1, 11/3, 14/1, 15/ 2B, 15/1B1C, 14/4 மற்றும் 52/3, கொட்டையூர் கிராமப் புல எண்கள் .97/3C3, 98/3C2, மற்றும் 123/3 ஆகியவற்றில் 110 ஏக்கர் பரப்பளவில் ஒரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு முன்நுழைவு அனுமதி அளித்தும் மற்றும் இப்பண்ணையில் உள்ள கட்டிடங்களை தற்காலிகமாக உபயோகித்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்படி நிலம் மற்றும் கட்டிடங்களின் உரிமை வேளாண்மைத்துறை இயக்குநர் வசமே இருக்கும் என்றும்அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ராஜேஷ் லக்கானி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
பதிவாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 3.
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை) சென்னை – 18.

<u>நகல்:</u>
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை – 9.
வருவாய்த்துறை , சென்னை–9
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20.2.15
பிரிவு அலுவலர்

20/2/15